DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செவ்வாய்கிழமை 15 ம் நாள் சாட்சியாகிய கோவர்தனன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவர்தனன் | வயது | 71 |
| த/பெ. | சஞ்சீவிநாயர் | இனம் | ஆண் |
| கிராமம் | பள்ளூர் | தொழில் | வேலை இல்லை |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C. 05/2021**
(மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).
**<u>குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில் 15.04.2025 எ.சா.1</u>**

1. நான் பள்ளூர் கிராமத்தில் பிறந்தேன் என்றால் இல்லை. கம்மாரபாளையம் கிராமத்தில் பிறந்தேன். எனக்கு கம்மாரபாளையத்தில் நிலம், வீடு உள்ளது என்றால் இல்லை. நான் எனது முதன்மை சாட்சியத்தில் பள்ளூரில் உள்ள எனது சொந்த வீட்டில் முதல் தளத்தில் வசித்து வந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என் பெயரில் சொந்த வீடு உள்ளது என்றால் இல்லை.

2. எனக்கு சொந்தமாக நிலம், வீடு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மொத்தம் எத்தனை மனைவிகள் என்றால் மூன்றுபேர். எத்தனை மனைவிகள் தற்போது உயிருடன் உள்ளார்கள் என்றால் ஒருவர் மட்டும்தான் உள்ளார். அந்த மனைவிதான் மனுதாரர் ஜெயந்தி என்றால் சரிதான். நான் எந்த வருடம் மனுதாரரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் ஞாபகமில்லை.

3. 22.04.1999 ம் தேதி மனுதாரரை திருமணம் செய்துகொண்டதாக எனது முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும், மனுதாரரும் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். எத்தனை வருடம் இருவரும் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் 20, 21 வருடம் வசித்து வந்தோம். மனுதாரர் மூலம் எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் பெயர் ஜெயஸ்ரீ. நானும், மனுதாரரும் வேலை செய்துதான்

குழந்தையை காப்பாற்றினோம் என்றால் நான் மட்டும்தான் வேலை செய்து காப்பாற்றினேன். நான் எங்கு வேலை செய்தேன் என்றால் பள்ளூரில் உள்ள எனது அண்ணனின் கிருஷ்ணா ஸ்வீட் கடையில் வேலை செய்தேன்.

4. எனது அண்ணன் பெயர் என்னவென்றால் தனசேகரன். கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடை எனக்கு சொந்தமானது என்றால் இல்லை. மனுதாரரின் திருமண செலவுகள் மற்றும் நகைகள் மனுதாரர் வீட்டில்தான் போட்டார்கள் என்றால் இல்லை. மனுதாரருக்கு திருமணத்தின்போது போட்ட நகைகள் மற்றும் வெள்ளிபொருட்களை கொண்டுதான் நான் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடையை மனுதாரருடன் சேர்ந்து தொடங்கினேன் என்றால் இல்லை.

5. கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடையில் இருந்து வந்த வருமானத்தை கொண்டுதான் 1,2 மனைவிகளின் குழந்தைகளை வளர்த்து வந்தேன் என்றால் இல்லை. கிஷோர், யுகன்யாவிற்கு எனக்கு திருமணம் ஆகும் போது என்ன வயது என்றால் 10,12 வயது இருக்கும். கிஷோர், யுகன்யா சொல்லிதான் மனுதாரர் என்னுடன் வாழ மறுக்கிறாரா என்றால் ஆமாம். எனது வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்தால் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

6. நான் 2006ம் வருடத்தில் இருந்து கடைக்கு செல்வதில்லையா என்றால் ஆமாம். எனக்கு 2006ம் வருடத்தில் என்ன வருமானம் உள்ளது என்றால் எனது மகன் கிருஷ்ண மூர்த்தி வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தை வைத்து வாழ்ந்து வந்தேன். கிருஷ்ணமூர்த்திக்கு என்ன வயது என்றால் 36 வயது இருக்கும். 2006ம் வருடம் கிருஷ்ணமூர்த்தி என்ன படிப்பு படித்திருந்தார் என்றால் பிபாம் படித்துவிட்டு வெளிநாடு சென்றிருந்தார். 2006ம் வருடம் கிருஷ்ண மூர்த்தி 10ம் வகுப்புதான் படித்திருப்பார் என்றால் இல்லை. 1987ம் வருடம் பிறந்தார்.

7. நான் கிருஷ்ணமூர்த்தி 2006ம் வருடம் வெளிநாடு சென்றதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது முதன்மை சாட்சியத்தில் புருசோத்தமன்தான் வேலைக்கு சென்று குடும்பத்தை காப்பாற்றியதாக தெரிவித்துள்ளது சரியா அல்லது கிருஷ்ணமூர்த்தி வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பியதாக தெரிவித்துள்ளது சரியா என்றால் இரண்டும் சரிதான். கிருஷ்ணமூர்த்தி பணம் அனுப்பியதாக எனது எதிர்உரை மற்றும் முதன்மை சாட்சியத்தில்

தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. புருசோத்தமன் எனது எந்த மனைவியின் மகன் என்றால் 2 வது மனைவியின் மகன். 1, 2 வது மனைவிகளின் குழந்தைகளுடன் நான் கூட்டு குடும்பமாக தற்போது வரை உள்ளேன் என்றால் சரிதான். அதனால்தான் எனது மூன்றாவது மனைவியை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டேன் என்றால் இல்லை. அவர் அவரது அக்கா பேச்சை கேட்டு சென்றுவிட்டார்.

8. மனுதாரர் எந்த தேதியில் வீட்டை விட்டு வெளியே சென்றார் என்றால் 2020 ம் வருடம் சென்றார். தேதி மாதம் தெரியாது. 2006 ம் வருடத்தில் இருந்து 2020 ம் ஆண்டு வரை மனுதாரர் தான் எனக்கு உதவிகள் செய்து வந்தார் என்றால் இல்லை. மனுதாரர்தான் எனது உயிரை காப்பாற்றி, கடையை நடத்தி வந்தார் என்றால் இல்லை. 1, 2 மனைவிகளின் குழந்தைகள் வளர்ந்த பிறகு நான் மனுதாரரை வெளியேற்றி விட்டு கடையை 1, 2 வ DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் செவ்வாய்கிழமை 15 ம் நாள் சாட்சியாகிய கோவர்தனன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10 வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவர்தனன் | வயது | 71 |
| த/பெ. | சஞ்சீவிநாயர் | இனம் | ஆண் |
| கிராமம் | பள்ளூர் | தொழில் | வேலை இல்லை |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C. 05/2021**

(மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**குறுக்கு விசாரணை மனுதாரர் தரப்பில் 15.04.2025 எ.சா.1**

1. நான் பள்ளுர் கிராமத்தில் பிறந்தேன் என்றால் இல்லை. கம்மாரபாளையம் கிராமத்தில் பிறந்தேன். எனக்கு கம்மாரபாளையத்தில் நிலம், வீடு உள்ளது என்றால் இல்லை. நான் எனது முதன்மை சாட்சியத்தில் பள்ளூரில் உள்ள எனது சொந்த வீட்டில் முதல் தளத்தில் வசித்து வந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். என் பெயரில் சொந்த வீடு உள்ளது என்றால் இல்லை.

2. எனக்கு சொந்தமாக நிலம், வீடு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு மொத்தம் எத்தனை மனைவிகள்

என்றால் மூன்றுபேர். எத்தனை மனைவிகள் தற்போது உயிருடன் உள்ளார்கள் என்றால் ஒருவர் மட்டும்தான் உள்ளார். அந்த மனைவிதான் மனுதாரர் ஜெயந்தி என்றால் சரிதான். நான் எந்த வருடம் மனுதாரரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் ஞாபகமில்லை.

3. 22.04.1999ம் தேதி மனுதாரரை திருமணம் செய்துகொண்டதாக எனது முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு நானும், மனுதாரரும் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். எத்தனை வருடம் இருவரும் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் 20, 21 வருடம் வசித்து வந்தோம். மனுதாரர் மூலம் எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் பெயர் ஜெயஸ்ரீ. நானும், மனுதாரரும் வேலை செய்துதான் குழந்தையை காப்பாற்றினோம் என்றால் நான் மட்டும்தான் வேலை செய்து காப்பாற்றினேன். நான் எங்கு வேலை செய்தேன் என்றால் பள்ளூரில் உள்ள எனது அண்ணனின் கிருஷ்ணா ஸ்வீட் கடையில் வேலை செய்தேன்.

4. எனது அண்ணன் பெயர் என்னவென்றால் தனசேகரன். கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடை எனக்கு சொந்தமானது என்றால் இல்லை. மனுதாரரின் திருமண செலவுகள் மற்றும் நகைகள் மனுதாரர் வீட்டில்தான் போட்டார்கள் என்றால் இல்லை. மனுதாரருக்கு திருமணத்தின்போது போட்ட நகைகள் மற்றும் வெள்ளிபொருட்களை கொண்டுதான் நான் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடையை மனுதாரருடன் சேர்ந்து தொடங்கினேன் என்றால் இல்லை.

5. கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடையில் இருந்து வந்த வருமானத்தை கொண்டுதான் 1,2 மனைவிகளின் குழந்தைகளை வளர்த்து வந்தேன் என்றால் இல்லை. கிஷோர், யுகன்யாவிற்கு எனக்கு திருமணம் ஆகும் போது என்ன வயது என்றால் 10,12 வயது இருக்கும். கிஷோர், யுகன்யா சொல்லிதான் மனுதாரர் என்னுடன் வாழ மறுக்கிறாரா என்றால் ஆமாம். எனது வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்தால் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை.

6. நான் 2006ம் வருடத்தில் இருந்து கடைக்கு செல்வதில்லையா என்றால் ஆமாம். எனக்கு 2006ம் வருடத்தில் என்ன வருமானம் உள்ளது என்றால் எனது மகன் கிருஷ்ண மூர்த்தி வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தை வைத்து வாழ்ந்து

வந்தேன். கிருஷ்ணமூர்த்திக்கு என்ன வயது என்றால் 36 வயது இருக்கும். 2006ம் வருடம் கிருஷ்ணமூர்த்தி என்ன படிப்பு படித்திருந்தார் என்றால் பிபாம் படித்துவிட்டு வெளிநாடு சென்றிருந்தார். 2006ம் வருடம் கிருஷ்ண மூர்த்தி 10ம் வகுப்புதான் படித்திருப்பார் என்றால் இல்லை. 1987ம் வருடம் பிறந்தார்.

7. நான் கிருஷ்ணமூர்த்தி 2006ம் வருடம் வெளிநாடு சென்றதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது முதன்மை சாட்சியத்தில் புருசோத்தமன்தான் வேலைக்கு சென்று குடும்பத்தை காப்பாற்றியதாக தெரிவித்துள்ளது சரியா அல்லது கிருஷ்ணமூர்த்தி வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்பியதாக தெரிவித்துள்ளது சரியா என்றால் இரண்டும் சரிதான். கிருஷ்ணமூர்த்தி பணம் அனுப்பியதாக எனது எதிர்உரை மற்றும் முதன்மை சாட்சியத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. புருசோத்தமன் எனது எந்த மனைவியின் மகன் என்றால் 2 வது மனைவியின் மகன். 1, 2 வது மனைவிகளின் குழந்தைகளுடன் நான் கூட்டு குடும்பமாக தற்போது வரை உள்ளேன் என்றால் சரிதான். அதனால்தான் எனது மூன்றாவது மனைவியை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டேன் என்றால் இல்லை. அவர் அவரது அக்கா பேச்சை கேட்டு சென்றுவிட்டார்.

8. மனுதாரர் எந்த தேதியில் வீட்டை விட்டு வெளியே சென்றார் என்றால் 2020ம் வருடம் சென்றார். தேதி மாதம் தெரியாது. 2006ம் வருடத்தில் இருந்து 2020ம் ஆண்டு வரை மனுதாரர் தான் எனக்கு உதவிகள் செய்து வந்தார் என்றால் இல்லை. மனுதாரர்தான் எனது உயிரை காப்பாற்றி, கடையை நடத்தி வந்தார் என்றால் இல்லை. 1, 2 மனைவிகளின் குழந்தைகள் வளர்ந்த பிறகு நான் மனுதாரரை வெளியேற்றி விட்டு கடையை 1, 2 வது மனைவியின் வாரிசுகளிடம் கொடுத்துவிட்டேன் என்றால் இல்லை.

9. நான் தான் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடையை நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. கம்மாரபாளையத்தில் எனக்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றால் இல்லை. என்னுடைய நிலத்தில் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை அமைத்து வருகிறார்கள் என்றால் சரிதான். நெடுஞ்சாலை அமைப்பதற்கு நிலம் கொடுத்தற்கு அரசாங்கத்தில் எனக்கு இழப்பீடு தொகை வழங்கப்பட்டது என்றால் சரிதான். ரூபாய் 50 லட்சம் கொடுத்தார்கள். எனது வங்கி கணக்கில் 5 கோடி ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை.

10. மேற்படி தொகை என்னுடைய வங்கி கணக்கில்தான் உள்ளது என்றால் எனது முதல் மகளுக்கு திருமணம் செய்தேன். எனக்கு சொத்து இல்லை என்று தெரிவித்துவிட்டு தற்போது 50 லட்சம் இழப்பீடு கொடுத்தாக முரண்பட்டு தெரிவித்துள்ளேன் என்றால் தற்போது என்னிடம் சொத்து எதுவும் இல்லை.

(மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.

து மனைவியின் வாரிசுகளிடம் கொடுத்துவிட்டேன் என்றால் இல்லை.

9. நான் தான் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கடையை நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. கம்மாரபாளையத்தில் எனக்கு விவசாய நிலங்கள் உள்ளது என்றால் இல்லை. என்னுடைய நிலத்தில் பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை அமைத்து வருகிறார்கள் என்றால் சரிதான். நெடுஞ்சாலை அமைப்பதற்கு நிலம் கொடுத்தற்கு அரசாங்கத்தில் எனக்கு இழப்பீடு தொகை வழங்கப்பட்டது என்றால் சரிதான். ரூபாய் 50 லட்சம் கொடுத்தார்கள். எனது வங்கி கணக்கில் 5 கோடி ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை.

10. மேற்படி தொகை என்னுடைய வங்கி கணக்கில்தான் உள்ளது என்றால் எனது முதல் மகளுக்கு திருமணம் செய்தேன். எனக்கு சொத்து இல்லை என்று தெரிவித்துவிட்டு தற்போது 50 லட்சம் இழப்பீடு கொடுத்தாக முரண்பட்டு தெரிவித்துள்ளேன் என்றால் தற்போது என்னிடம் சொத்து எதுவும் இல்லை.

(மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.